முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமாளிகைத்தேவர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

18.09.2018, செவ்வாய்க்கிழமை

1. **கருமத்தை போக்கி காத்தருள**
**கந்தனே மக்களை வழி நடத்த**
**ஆறுமுக அரங்கனாய் அவதாரம்**
**அகிலத்தில் புரிந்து சேவை ஆற்றிட**

2. ஆற்றல்பட இவை பிறவியிலேயே
ஆறுமுகனார் அருளைப் பெற்று
தேற்றம் காண வாரீர் வாரீர் என
தெரிவித்து ஒளி சூட்சும நூலை

3. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
**நிலமதனில் உபய திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 2ம் நாள் 18.09.2018, செவ்வாய்க்கிழமை)**
**ஞாலமதில் திருமாளிகைத்தேவர் யானும்**
**நாட்டிடுவேன் உலகோர் தேற்றம் காண**

4. காணவே பிரணவ சக்தி கூட்டி
கந்தனாய் அரங்க ஞானியும்
ஞானவழிகாட்டல் அருளும் தேசமாக
ஞானிகள் பூசையை செய்து அருள

5. அருளவே முழுமதி காலம் ஆசி
அடைபவர்க்கு ஆறுமுகப் பெருமான்
அருளதுவும் கிட்டி ஏற்றமும்
அளவிலா ஆற்றல் பெருக்கமும்

6. பெருக்கமுடன் வளமான பொருளாதாரமும்
பேதமற குடும்ப நலமும் சம்பத்து பலமும்
வருத்தமிலா வாழ்வும் வசதி நிலையும்
வாழ்வில் நெடிய ஆயுளும் கண்டு சிறக்கும்

7. சிறப்பான அரங்கமகான் சேவை
செயல்படும் நிலைபடும் பூமியெல்லாம்
மறுப்பான நிலநடுக்கம் பேரிடர்
மக்களிடை போர் யுத்தம் எனும் ஆபத்தில்லா

8. ஆபத்தில்லா சகல பாதுகாப்பும்
அழியாமை பலமும் கிட்ட நேரும்
அபயமென ஆறுமுகன் நாமசெபம்
அளவிலா எண்ணிக்கையில் செய்து

9. செய்துமே சுத்தநெறிபட வாழ
சிங்கார வேலன் அருள்தயவு கிட்டி
மெய்ஞானம் மேலான பதவி
மேற்பார்வை உயர்நிலை கண்டும்

10. கண்டுமே குரு அரங்க ஞானி
கருணையால் சிறந்திடுவர்
தொண்டேயென அரங்கன் செய்கின்ற
தொடர் தருமமே மக்களை காக்கும்

11. காக்க காக்க கனகவேலே
கண்கண்ட ஞான குருவே உன்னை
ஆக்கமுடன் அகிலம் அடிபணிய உயரும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் திருமாளிகைத்தேவர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மக்களின் முன் ஜென்ம பாவங்களான கர்மவினைகளைப் போக்கி மக்களை துன்பங்களில் இருந்து மக்களை காத்து அருள் செய்து மக்களை வழிநடத்திட முருகப்பெருமானே ஆறுமுக அரங்கமகா தேசிகனாய் இவ்வுலகினில் அவதாரம் செய்து தொண்டுகளை செய்து வருகின்றார். ஆதலினால் உலக மக்களே நீங்கள் வாழும் இந்த பிறவியிலேயே முருகப்பெருமானின் அருளைப் பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு வாரீர் வாரீர் என உங்களுக்கு அழைப்பு விடுத்துமே உலக நலன் கருதி ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 2ம் நாள் 18.09.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே திருமாளிகைத்தேவர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமாளிகைத்தேவர்.

ஓங்கார சக்திதனை பெருக்கியே முருகப்பெருமானாய் ஆறுமுக அரங்கமகா தேசிகனும் உலகோர்க்கு விளங்கி உலக மக்களெல்லாம் கடைத்தேறிடவே ஞான வழிகாட்டல்களை அருளுபதேசமாக செய்து வருகிறார். ஞானிகளின் ஆசியை பெறும் வகையில் ஞானிகள் பூசைகளை செய்து அருள் செய்து வருகின்றார்.

ஆதலினாலே அரங்கன் நடத்தும் உண்மை ஞான பூஜைகளாம் பௌர்ணமி சிறப்பு ஞானியர் பூஜைகளிலே கலந்து கொண்டு அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளைப் பெற்றிட்டவர்களுக்கு முருகப்பெருமானின் அருளும் கிடைத்து அவரவர் வாழ்வில் பலவிதமான முன்னேற்றங்களை காண்பதோடு ஆற்றலும் பெருகிடும், வளமான பொருளாதாரம் பெருகி பேதாபேதம் இன்றி வாழ்ந்து நற்குடும்பம் நற்செல்வங்களுடன் வருத்தமற்ற இன்பமான வாழ்வையும் வசதிகளையும் பெற்று வாழ்வதோடு நீடிய ஆயுளும் பெற்று சிறப்படைவார்கள்.

சிறப்புமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் தொண்டுகள் எல்லாம் பூமியில் அற்புதமாய் செயல்படும், பூமியும் நிலைப்படுமப்பா. உலகோரை துன்புறுத்தும் நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரிடர்கள் வாராது. உலக மக்களிடையே ஒற்றுமை உணர்வு மேலோங்கி ஆபத்தான போர்கள் யுத்தங்கள் ஏதும் வாராது காக்கப்படும். உலகம் முழுதும் ஆறுமுக அரங்கன் அருளால் முருகப்பெருமானின் தயவால் சர்வ பாதுகாப்பும், அழிவில்லாத நிலையும் உண்டாகும்.

முருகா அபயம், சண்முகா சரணம் என்றே முருகப்பெருமானின் திருவடிகளிலே தஞ்சமடைந்து அபயம் அபயம் என்றே முருகப்பெருமானிடத்து அபயம் அளிக்க வேண்டுகோள் வைத்து முருகப்பெருமானின் திருநாமங்களை பயபக்தியுடன் நாளும் தவறாமல் நாமஜெபங்களாக அதிக அளவில் ஜெபித்து வருவதுடன் அரங்கன் கூறிய ஞானிகள் வழிமொழிந்த தூயநெறியின்படி வாழ்ந்து வந்தால் முருகப்பெருமானின் அருள் தயவு கிடைத்து அவர்க்கெல்லாம் மெய்ஞானம் உண்டாகும். மேன்மைமிக்க உயர்பதவிகள் கிடைக்கும், பலவிதமான நிறுவனங்களை நிர்வகிக்கும் மேலாண்மை நிலையும் உண்டாகும். அவரெல்லாம் குரு ஆறுமுக அரங்கமகா தேசிகரின் கருணையால் இந்தவித சிறப்புகளை தொடர்ந்து பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்ந்திடுவர்.

**தொண்டுகளுடன் அரங்கன் செய்யும் தொடர்ந்த தருமச் செயல்களே இந்த உலகை காத்திடும் என்பதை உலகோர் அறிய வேண்டும். காக்க காக்க கனகவேலே கண்கண்ட மகா ஞானகுருவே அரங்கமகா தேசிகனே உம்மை உளமார நம்பிக்கையோடு வணங்கி உமது திருவடி பணிந்து நடந்திட இந்த உலகமே உயர்வடையுமப்பா** என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் திருமாளிகைத்தேவர்.

–சுபம்–